2016 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, அங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டவேண்டிய அவசியமிருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

33—

மேம்படுத்துதல்

***1315—டாக்டர் இரா. மாசிலாமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைலம் தொகுதி, மைலம் ஒன்றியம், முப்புளியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட முப்புளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், மைலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. ஏற்கெனவே மைலம் ஊராட்சி ஒன்றியத்திலும், மைலம் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத்

[2016 ஆகஸ்ட் 8

தரம் உயர்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட இடைவெளிக்குப் பிறகு, இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுகிற வாய்ப்பினை எனக்கு அளித்த பகுத்தறிவு பகலவன் தந்தைப் பெரியாரின் துணிவையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் கனிவையும் ஒருசேர பெற்றிருக்கின்ற தமிழகத்தின் முதுபெரும் தலைவர், முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர் ஆற்றுப்படுத்துகின்ற திராவிட இலட்சியங்களை, அடர்த்தி குறையாமல் இந்த மாமன்றத்தில் எதிரொலித்துக்கொண்டிருக்கின்ற திராவிட இயக்கத்தின் மூன்றாவது அத்தியாயம், வருங்கால தமிழகத்தை வார்ப்பிக்க இருக்கின்ற எங்களின் வழிகாட்டி பாசமிகு தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னை வெற்றி பெறச் செய்து இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பியிருக்கின்ற மைலம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கழகத்தின் நிருவாகிகளுக்கும், தோழமைக் கட்சி நிருவாகிகளுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் முதலில் உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மைலம் சட்டமன்றத் தொகுதி என்பது, ஒரு நகராட்சியோ, பேரூராட்சியோ இல்லாத, முழுவதும் கிராமங்கள் மட்டுமே நிரம்பிய, கிராமங்களை மட்டுமே உள்ளடக்கிய ஒரு தொகுதியாகும். அங்கு வாழ்கின்ற மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, விளிம்பு நிலையில் உள்ள மக்களாவர். எனவே, அந்த மக்கள் வறுமையில், இல்லாமையில், ஏழ்மையில் இன்றைக்கு உழன்றுகொண்டிருக்கிறார்கள். அவர்கள் மேல் சிகிச்சைக்காக, சிறப்புச் சிகிச்சைக்காகச் செல்ல வேண்டுமென்று சொன்னால், திண்டிவனம் நகரத்திற்கோ அல்லது விழுப்புரம் நகரத்திற்கோ

2016 ஆகஸ்ட் 8]

செல்ல வேண்டும். எனவே, அந்த மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, நிறைவேற்றிட வேண்டும். நான் கேட்கிற அந்த முப்புளி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றி 20—க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். அடுத்து இன்னும் ஒரு துணைக் கேள்வி கேட்பதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *எனவே, கனிவோடு இந்த அரசு அதைத் தரம் உயர்த்திக் கொடுக்குமா என்று நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய மக்களுக்குத் தரமான மருத்துவ சிகிச்சையை வழங்க வேண்டுமென்பதற்காகவும், அந்த மக்களுடைய மருத்துவத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கோடும்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் இருக்கக்கூடிய ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தேர்ந்தெடுத்து, அதை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்தி, X-ray, Scan போன்ற வசதிகளை ஏற்படுத்தி, கூடுதலாக மருத்துவர்களை நியமனம் செய்து அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய அளவிலே ஓர் அற்புதமான திட்டத்தை இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2001—லே முதன்முதலாக சேலம், காடையாப்பட்டியிலே தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், 2016 மார்ச் மாதத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலேதான், 385 ஒன்றியங்களிலும், ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற வகையில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக ஏற்கெனவே முழுமையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன.*

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் அனைத்து ஒன்றியங்களிலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம், அறுவை சிகிச்சை அரங்கம் உட்பட அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய

30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய ஒன்றியத்திலே மயிலம் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இப்போது முப்புளி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். முதற்கட்டமான இலக்கு முடிந்திருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அடுத்தபடியாக, அதிகமான மக்கள் தொகை இருக்கக்கூடிய இடங்கள்; அல்லது மலைவாழ் பிரதேசங்கள்; அல்லது ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே அதிகமான மக்கள் தொகை, அதாவது, 5 இலட்சம், 6 இலட்சம் என்ற அளவில் மக்கள் தொகை நெருக்கடியாக இருக்கக்கூடிய ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து, கணக்கிட்டு வருகிறது. அந்த வகையிலே, சாத்தியக்கூறுகளைப் பூர்த்தி செய்வதாக இருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதனை ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.

டாக்டர் இரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தித் தருவதற்குத்தான் வழிவகை இருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஆனால், 405 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு தற்போது செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது, கூடுதலாகவே மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்பதைப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. ஆரப்பாளையம், தும்பல் ஆகிய கிராமங்களில் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதைப்போல, கடலூர் ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

2016 ஆகஸ்ட் 8]

திருவந்திபுரம், நடுவீரன்பட்டி, காரைக்காடு என்ற 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. எனவே, இந்த அரசு கனிவோடு இதைப் பரிசிலிக்க வேண்டும். நியதி என்பது நியாயங்களுக்கு உட்பட்டதுதான். மக்கள் நல்ல சட்டங்களால் ஆளப்படுவதைவிட, நல்ல தலைவர்களால் ஆளப்பட வேண்டும் என்பது நியதி. எனவே, கனிவோடு விதிவிலக்கு அளித்து, முப்புளி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கான மருத்துவ சேவை என்பது விரிவாக, தமிழ்நாடு முழுவதும் பரவலாக, அனைவருக்கும் சமமாக ஏற்படுத்த வேண்டுமென்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினுடைய கொள்கை. இடையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே, அவர்கள் கொஞ்சம் விதிமுறைகளையெல்லாம் மீறி, (குறுக்கீடுகள்) ஒரே ஒன்றியத்திலே 2 ஆரம்ப சுகாதார நிலையங்களையெல்லாம் தரமுயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் 405 ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்று குறிப்பிட்டார். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அதற்குப்பிறகு, இப்போது மார்ச் மாதத்திலே 15 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தியிருப்பதால், இப்போது அந்த எண்ணிக்கை 420 ஆக உயர்ந்து இருக்கின்றன. அதையும் மாண்புமிகு உறுப்பினருக்கு நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 385 ஒன்றியங்களிலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தியிருக்கின்றது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். தற்பொழுது அதிகமான மக்கள் தொகை இருக்கின்ற பகுதிகளில், அதைப்போல, மலைப் பகுதிகளில் தேசிய நெடுஞ்சாலை அல்லது மாநில நெடுஞ்சாலைகளில் விபத்துகள் நேரிடக்கூடிய பகுதிகளில் இருக்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை இப்போது தேர்ந்தெடுத்து, அதிலே முன்னுரிமை கொடுத்து தரமுயர்த்திட இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையிலே, சாத்தியக்கூறுகள் இருந்தால், மாண்புமிகு

உறுப்பினர் குறிப்பிடுகிற முப்புளி ஆரம்ப சுகாதார நிலையம் விதிமுறைகளைப் பூர்த்தி செய்கிறபட்சத்திலே, அவருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

முற்பகல் 10—35

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதவள மேம்பாட்டிற்கு முக்கிய பங்கு வகிப்பது சுகாதாரம். தமிழக மக்களின் சுகாதாரத்தைப் பேணிக் காக்கும் வகையில், தமிழக மக்களுக்கு விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்த உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவி மாதர்குல மாணிக்கம், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதிக்குட்பட்ட பல்லடம் வட்டம், செம்மிபாளையத்தில் 30 படுக்கை வசதிகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. செம்மிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, கிராமப்புறங்களிலே வசிக்கும் மக்கள் அதிகமான அளவில் மருத்துவம் பார்ப்பதற்கு வருகிறார்கள். செம்மிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பல் மருத்துவப் பிரிவு இல்லாத காரணத்தால், பல் சம்பந்தமான நோய்களுக்கு மருத்துவம் பார்ப்பதற்கு பல்லடம் அல்லது திருப்பூருக்குத்தான் செல்லவேண்டும். ஆகவே, பொது மக்களின் நலன் கருதி, மக்களின் நலன் காக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, செம்மிபாளையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய பல் மருத்துவப் பிரிவினைத் துவங்க ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் பிரிவும் படிப்படியாகத் தொடங்கப்பட்டு, அந்தத் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையிலே, இந்த ஆண்டுகூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 50 இடங்களில் புதிய பல் பிரிவுகள் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற செம்மிபாளையத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் உரிய ஆய்வுகள் செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.*

திரு. கு. இராதாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற தகுதியை எனக்கு வழங்கிய எங்கள் கழகத்தின் தலைவர், எங்கள் உயிரினும் மேலான தலைவர், முத்தமிழ் வித்தகர் ஐயா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் பொருளாளர் மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எங்கள் ஆற்றல்மிக்க அண்ணன் தளபதியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு அரசியலில் ஆக்கமும், ஊக்கமும் அளித்த எனது மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு அண்ணன் திரு. பொன்முடி அவர்களையும் வணங்குகிறேன். எனது வெற்றிக்காக வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், எனக்காக உழைத்திட்ட கழகத்தின் தோழர்கள், தோழமைக் கட்சிகளின் நிருவாகிகள் அனைவருக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களால் மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முன்னிலையில், அண்ணன் பொன்முடி அவர்கள் தலைமையில் விழுப்புரம் மருத்துவமனை

முண்டியம்பாக்கம் கிராமத்தில் துவங்கப்பட்டது. அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைந்திருக்கின்ற இடம் முண்டியம்பாக்கம் கிராமம். அந்தக் கிராமத்தில் டாக்டர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் தங்கியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மருத்துவமனைக்குச் செல்கின்ற இடத்தில் 560 மீட்டர் நீளத்திற்கு ஒரு பெரிய நெடுஞ்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்களால் அந்த வழியில் வரமுடியாமல், 5 அடி தூரத்திலிருக்கும் மருத்துவமனைக்கு வரவேண்டிய நிலையில், இன்றைக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அவர்கள் சுற்றிவர வேண்டியிருக்கிறது. அந்த நீண்ட சுவரில், வாகனப் போக்குவரத்துக்கென்று இல்லாமல், குறைந்தபட்சம் ஆட்கள் வந்து செல்ல இரண்டு rolling gates அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து உரிய ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இறப்பு சதவிகிதத்தில் 60 சதவிகிதம் பேர் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு இறந்து வருகிறார்கள். இதனைக் கருத்தில்கொண்டு மாவட்ட மருத்துவமனையில் புற்று நோய்ப் பிரிவு தொடங்க, கழகத்தின் கடந்த ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களால் ரூ.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தப் பணிகள் அப்படியே கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. எனவே, புற்று நோயினால் பாதிக்கப்படக்கூடியவர்கள் பக்கத்து மாநிலமாகிய கேரளாவுக்கு அல்லது சென்னையிலுள்ள அடையாருக்கு வரவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. எனவே, அதில் கவனம் செலுத்தி, உடனடியாக புற்று நோய்க்கென ஒரு தனிப் பிரிவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறப்பு சதவிகிதம் குறித்த பொதுவான கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். இறப்பு சதவிகிதத்தில் சுமார் 60 சதவிகிதம் பேர் புற்று நோயினால் இறக்கிறார்கள் என்று எந்தப் புள்ளிவிவரமும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த நோயினால் பாதிக்கப்படுபவர்கள் பக்கத்திலே இருக்கின்ற கேரள மாநிலம் அல்லது சென்னை, அடையாறில் உள்ள மருத்துவமனைக்கு வரவேண்டியுள்ளதாகச் சொல்கிறார். சென்னை அடையாறு மருத்துவமனைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், மாநில அரசின் மூலமாக ரூ.120 கோடியை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10—40

அதேபோல, இன்றைக்குப் புற்று நோய் அதிகரித்து வருகின்றது என்பதைக் கருத்திலே கொண்டுதான், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, புற்று நோயை ஆரம்பத்திலே screening *செய்யக்கூடிய வகையில், தொற்றா நோய்களுக்கான பிரிவை ஒவ்வோர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிருவகித்து வருகிறது. மேலும், அதற்கென தனி செவிலியர்களை நியமித்து, அனைத்துப் புற்று நோய்களையும் ஆரம்ப நிலையிலே பரிசோதனை செய்வதோடு, அவர்களின் மேல் சிகிச்சைக்கும் வழிவகுக்கப்பட்டுள்ளது.* Centre of Excellence for Cancer *என்று சொல்லக்கூடிய அடையாறு புற்று நோய் மருத்துவமனையைப் போலவே, சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையும் புற்று நோய்க்கான சிறப்பு மருத்துவமனையாகும். அதேபோல, சென்னை மருத்துவக் கல்லூரி உட்பட நான்கு* Regional Cancer Centres *கோயம்புத்தூர், திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள மண்டலப் புற்று நோய் ஆராய்ச்சி மையங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தலா ரூ.15 கோடி நிதியொதுக்கி, அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் குறிப்பிட்ட, கன்னியாகுமரியிலும் அந்தப் பிரிவைத் தொடங்குவதற்குண்டான ஒரு பூர்வாங்க நடவடிக்கையை*

மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

34—

தொழிற்பேட்டை

***2062 திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, கட்டமடு ஊராட்சிப் பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினமே தனது உயிராய், தமிழ் மக்களே தனது உறவாய், தமிழ் மொழியே தனது உணர்வாய், தமிழர் முன்னேற்றமே தனது கனவாய், தன் வாழ்வையே அர்ப்பணித்து, தவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதியில் கட்டமடு ஊராட்சிப் பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*